**கவனிக்க.**- 2007.08.03 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1510 - 2007 අගෝස්තු 10 වැනි සිකුරාදා - 2007.08.10

1510 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 645 |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, ஓகத்து 17 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, ஓகத்து 03 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்தி களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தி யோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப் பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்ட தாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்தி லேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலிய வற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன்அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங் களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வை யாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றை யும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

B2–B 079519

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கல்வி அமைச்சு**

## இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2ஆம் வகுப்பின் II ஆந் தரத்தின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆந் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை 2007, நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறும்.

2. இப்பரீட்சைக்குரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் 1999 மார்ச் 11 ஆந் திகதிய 1970/13 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. வசதிக்காக அப்பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது.

உத்தியோகத்தர் ஒருவருக்கு வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குரிய பாடங்களை ஒரே தடவையில் அல்லது தனித்தனியான சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும்.

**பாடவிதானம் :**

| விடய இல. | பாடம் | புள்ளி | நேரம் |
|---|---|---|---|
| 01 | பொது முகாமைத்துவம் மற்றும் தாபனச் செயற்பாடுகள் அரச தாபனக் கோவையின் i, ii, iii, iv, v, vii, viii, ix, xii, xiii, xiv, xxiv, xxviii, xxx மற்றும் xxxi ஆகிய வாசகங்களுக்கு விசேட கவனத்துடன் தாபன விதிக் கோவையின் சட்டம் | 100 | 1 1/2 மணி |
| 02 | *நிதி ஒழுங்குவிதிக் கோவை.-* அரச நிதி ஒழுங்குவிதிக்கோவை யின் I ஆம் பாகத்தின் i, ii, v, viii, xii மற்றும் xiv, வாசகங்களுக்கு விசேட கவனத்துடன் | 100 | 1 1/2 மணி |
| 03 | *கல்விச்சட்டம்.-* பரீட்சார்த்தி களிடம் கீழ்க் குறிப்பிடப்பட்ட கட்டளைச் சட்டம் மற்றும் பாராளுமன்றச் சட்டம் தொடர் பான விளக்கம் எதிர்பார்க்கப் படுகின்றது. | 100 | 2 மணி |

(i) 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கல்விக் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட சட்டக் கோவைகள்

(ii) 1960 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக் உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் ஆசிரியர் கல்லூரி (விசேட ஒழுங்கு விதிகள் ) சட்டம்

(iii) 1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் ஆசிரியர்கல்லூரி (குறைநிரப்பு ஒழுங்கு விதிகள்) சட்டம்

(iv) 1976 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பகிரங்க பரீட்சை (மறுசீரமைப்பு) சட்டத்தினால் மறுசீரமைக்கப்பட்ட 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பகிரங்க பரீட்சைச் சட்டம்

(v) 1981 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை (விசேட ஒழுங்கு விதிகள்) சட்டம்

(vi) 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வி தாபனச் சட்டம்

(vii) 1986 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க கல்விக் கல்லூரிச் சட்டம்

(viii) 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழு சபைச் சட்டம்

(ix) 1997 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க தேசிய ஆசிரியர் கல்வி அதிகார சபைச் சட்டம்

(x) 13ஆவது மறுசீரமைப்பு மற்றும் அடிப்படை உரிமை தொடர்பான 3 ஆவது வாசகத்திற்கு விசேட கவனத்துடன் இலங்கை அரசியல் யாப்பு

(xi) கல்விக்குரியதான மாகாண சபையினால் விதிக்கப்பட்ட கட்டளைச் சட்டம்

**குறிப்பு.-** பரீட்சார்த்திகளினால் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% புள்ளிகளைப் பெறவேண்டும்.

3. **பரீட்சையின் மொழிமூலம்.-** (i) பரீட்சார்த்திகளுக்கு அரசமொழி அல்லது தேசிய மொழி ஆகியவற்றில் ஏதாவதொன்றில் விடையளிக்க முடியும்.

(ii) பரீட்சார்த்தி அரச சேவைக்கு இணைந்து கொள்வதற்கு முன்னர் தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழிமூலம் அல்லது போட்டிப் பரீட்சையின்றி அரச சேவைக்கு இணைந்து கொண்டோர் தொடர்பாக அரசசேவைக்கு இணைந்துகொள்ள தகைமை பெற்ற பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலத்தில் விடையளிக்க முடியும்.

4. பரீட்சார்த்தி தமக்கு உரிமையற்ற மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றுவதாக தெரியவருமிடத்து அவர் பரீட்சாத்தி நிலையிலிருந்து நீக்கப்படுவார்.

5. விண்ணப்பப்படிவம் கீழ்க் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கமைய தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்.

6. இப்பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடத்துவதற்காக அவரால் விதிக்கப்பட்ட சட்டங்களை பின்பற்ற பரீட்சார்த்தி பொறுப்பாக இருக்க வேண்டும்.

7. விண்ணப்பப்படிவம் 2007.09.10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அத்தினத்திற்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2-II வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை" எனக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

8. பரீட்சார்த்தி பரீட்சைக்கு 07 நாட்களுக்கு முன்னர் தமது அனுமதி அட்டை கிடைக்காவிட்டால் அவர் அது சம்பந்தமாக தாமதமின்றி "பத்தரமுல்லை, பெலவத்தை, பரீட்சைத் திணைக்கள பரீட்சை ஆணையாளர் நாயகம்" (தந்தி அனுப்பும் முகவரி : பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை பத்தரமுல்லை) என்ற விலாசத்திற்கு அனுமதி அட்டை கிடைக்கவில்லை என அறிவிக்க வேண்டியதுடன் கீழ்க் குறிப்பிடப்பட்ட தகவல்களையும் வழங்க வேண்டும்.) :-

(i) பரீட்சையின் பெயர் ;

(ii) பரீட்சார்த்தியின் முழுப் பெயர் ;

(iii) பரீட்சார்த்தியின் முகவரி ;

(vi) விண்ணப்பப்படிவம் அனுப்பிய திகதி.

(பதிவு இலக்கம் மற்றும் தபால் அலுவலகம்) அருகாமையில் இருப்போர் தகவலை உதவியாளர் மூலம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் பரீட்சைக் கிளை (E-Block) அறிவிக்க முடியும்.

9. மேற்கூறப்பட்ட 8 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்திசெய்ய தவறும் பரீட்சார்த்திகளினால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

10. பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளங்களை உறுதி செய்வதற்காக சான்றுகளைச் சமர்ப்பிப்பது பரீட்சார்த்தியின் பொறுப்பாக இருப்பதுடன் அதற்காக கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் எதனையும் சமர்ப்பிக்க முடியும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

11. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட அடிப்படையில் பரீட்சைக் கட்டணத்தை அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ) முதற் தடவையாக பரீட்சைக்குத் தோற்றுபவர்களிடமிருந்து முழுமையான பரீட்சைக் கட்டணம் அல்லது பகுதிக்காக கட்டணம் அறவிடப்படமாட்டாது :-

(ஆ) மொத்தப் பரீட்சைக் கட்டணம் ரூ. 150
ஒரு பாடத்திற்கு ரூ. 50

பரீட்சாத்திகளினால் கையொப்பமிட்டு ஒழுங்கான முறையில் இரத்துச் செய்து வருமான முத்திரை மூலம் கட்டணம் செலுத்த வேண்டும்.

ஆரியரத்ன ஹேவகே,
செயலாளர்
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பெலவத்தை,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆந் தர வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை

(Efficiency Bar Examination in Class 2 Grade II of Sri Lanka Teacher Educators' Service.)

(விண்ணப்பப்படிவம் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் விசேட பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற விலாசத்திற்கு நிறுவனத் தலைவர் ஊடாக பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

(பரீட்சையின் பெயர் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் : 2
தமிழ் : 3
ஆங்கிலம் : 4 ☐

(உரிய குறியீட்டு இலக்கத்தை குறிப்பிடவும்)

1. (அ) முதலெழுத்தை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :
..............................................................
உ-ம் Mr./Mrs./Miss SILVA. A. B.

(ஆ) முதலெழுத்துக்களினால் குறித்துக்காட்டப்படும் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

2. பிறந்த திகதி :
வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3. (i) பதவிப் பெயர் :----.
(ii) சேவையாற்றும் கல்விக் கல்லூரி/ஆசிரிய மத்திய நிலைய முகவரி: ............................................. (அனுமதிப்பத்திரம் இம்முகவரிக்கு அனுப்பப்படும்)

4. சொந்த முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

5. அறிவித்தலில் 3 ஆவது வாசகம் (அ) இன் கீழ் கூறப்பட்டுள்ள பாட இலக்கம் மற்றும் பாடத்துடன் எடுக்கும் பாடங்களைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும் :-

| பாட இலக்கம் | பாடத்தின் பெயர் |
|---|---|
| (1)<br>(2)<br>(3) | |

6. இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு முழுமையாக அல்லது அதிலொரு பகுதிக்கு தோற்றியுள்ளீரா? அவ்வாறாயின் பாடம் மற்றும் தோற்றிய ஆண்டு, மொழியைக் குறிப்பிடவும் :-

| பாடம் | ஆண்டு | மொழி மூலம் |
|---|---|---|
| | | |

7. செலுத்திய பரீட்சைக் கட்டணம் :----.

| முத்திரை ஒட்டவும் |
|---|

(உரிய கட்டணத்திற்கான முத்திரை ஒட்டி அதன்மேல் விண்ணப்பதாரியினால் கையொப்பமிட்டு இரத்துச்செய்ய வேண்டும்)

8. மேற்கூறப்பட்ட விபரங்கள் உண்மையானது என்றும் வர்த்தமானி அறிவித்தலில் 3 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற எனக்கு உரிமை உண்டு என்றும் தெரிவிக்கிறேன்.

----.
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
பரீட்சைத் திணைக்களம்,

இவ்விபரம் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதி பெற்றவர் என்றும் வர்த்தமானி அறிவித்தலின் 3 ஆவது வாசகத்திற்கமைய அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்ற தகுதி உடையவர் என்றும் உறுதிசெய்கிறேன். பரீட்சார்த்தி முத்திரையை உரியவாறு செல்லுபடியற்றதாக்கியுள்ளதாக உறுதி செய்கிறேன்.

----------------,
பீடாதிபதி/ அதிபர்/ ஆசிரிய மத்திய நிலைய பொறுப்பாளரின் கையொப்பம் மற்றும் பதவிப் பெயர்.

திகதி :----.

8-241

---

## திருத்தம்

## பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு

### பதிவாளர் நாயகம் திணைக்களம்

### பதிவாளர் சேவையில் தரம் III பதவிகட்கு ஆட்சேர்த்தல்

2007.08.03 ஆந் திகதிய 1509 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி I: தொகுதி II (அ) இல் பிரசுரிக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட தலையங்கத்தின் கீழான அறிவித்தலின் 6 ஆம் பந்தியின் உப பந்தி 6.2 இன் (அ) ஆம் பந்தி பின்வருமாறு திருத்தி வாசிக்கப்படல் வேண்டும் :-

6.2 உள்வாரி விண்ணப்பதாரிகள் :

(அ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற தினத்திற்கு முற்பட்ட 5 வருட காலத்தில் பொது முகாமைத்துவ சேவையின் தரம் I இல் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்ட அலுவலர்கள் ;

8-262

---

## சுகாதார சேவைகள் திணைக்களம்

### ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும், பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை - 2007 செத்தெம்பர்

1991.05.17 ஆந் திகதியும் 662/11 ஆம் இலக்கமும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சுகாதார சேவையில் வைத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பான நியதிச் சட்டக் கோவையின் 07 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்கள் II ஆம் தரத்திற்கு உயர்த்தப்படுவதற்கு முன்பும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் தமது சேவையில் உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்பும் தேர்ச்சியடைய வேண்டிய திணைக்களப் பரீட்சை 2007.09.30 ஆந் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும் இடமும் கால அட்டவணையும் அனுமதி அட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

2. **தகைமைகள்.**- இதுவரை இப்பரீட்சையைப் பூரணப்படுத்தாத ஆரம்ப தரத்தின் வைத்திய உததியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் மட்டும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

3. **விண்ணப்பங்கள்.**-இச்சுற்று நிரூபத்தில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் போன்று

விண்ணப்பதாரிகளினால் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் நிறுவனத் தலைவரின் மூலம் "கொழும்பு 10, இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, 'சுவசிரிபாய கட்டிடம்' பணிப்பாளர் (பரீட்சை)" அவர்களுக்கு 2007.08.31 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலின்மூலம் அனுப்ப வேண்டும். தனது விண்ணப்பத்துடன் முகவரி எழுதப்பட்ட ரூபா 30.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9"x4" அளவுள்ள கடித உறையொன்றும் அனுப்ப வேண்டும். (இதில் விரும்பிய வகையில் அலுவலக முகவரி அல்லது சொந்த முகவரியை எழுதலாம்).

4. ***பரீட்சைக் கட்டணம்.***- (i) முதல்முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள், பரீட்சைக் கட்டணத்தினின்றும் விதிவிலக்களிக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ஒரு விடயத்திற்கு ரூபா 25 வீதம் மதிப்பிழக்கப்படாத முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மேல் தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அதை செல்லுபடி நீக்கம் புரியப்படுதல் வேண்டும்.

(ii) எக்காரணத்தைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சையொன்றின் பொருட்டு மாற்றவோ அல்லது மீளச் செலத்தப்படுதலோ புரியப்படமாட்டாது.

5. ***பரீட்சைக்கு உட்படுத்திக் கொள்தல்.***- (i) ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அவ் அனுமதி அட்டைகளை உரிய முறையில் நிரப்பி பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்கப்படாத எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(ii) விண்ணப்பதாரர்களினால் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை நிலைய அதிபருக்குத் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) தேசிய ஆளடையாள அட்டை ;
(ஆ) திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ;
(இ) சாரதி அனுமதிப்பத்திரம் ;
(ஈ) கடவுச்சீட்டு.

6. ***பரீட்சைத் திட்டம்.***- இப்பரீட்சை மூன்று எழுத்து மூல வினாப்பத்திரங்களையும் சிங்களம்/தமிழ் வாய்மொழிப் பரீட்சையொன்றையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சியடைவதன் பொருட்டு ஒரு விடயத்திற்கு குறைந்த பட்சம் 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையைப் பூரணப்படுத்திக் கொள்ளலாம்.

7. ***பரீட்சைப் பாடத்திட்டம் :***

7.1 ***எழுத்துப் பரீட்சை :***

7.1.1 *தாபன விதிக்கோவை* (நேரம் : 02 மணித்தியாலம்).- 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். - மொத்தப் புள்ளிகள் 100.

***பாடவிதானம்***

(i) தாபனவிதிக்கோவை :

(அ) I ஆம் பிரிவு ii, iii, v, vi, vii, viii, ix, xi, xii, xiii, xv, xxiv, xxv, xxvii, xxviii, xxx, xxxi, xxxii, xxxiii அத்தியாயங்கள்

(ஆ) II ஆம் பிரிவு XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள்

(ii) சுகாதார சேவைத் திணைக்களத்தின் பொதுவான ஒழுங்குவிதிகள்

(iii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகள்.

7.1.2 வைத்தியசாலைகள், மருந்துசாலைகள் என்பன வற்றின் நிர்வாகம் (நேரம்) 1 1/2 மணித்தியாலம்.- 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும் - மொத்தப்புள்ளிகள் 100.

***பாடவிதானம்.***- சுகாதார கைநூல்

I ஆம் பிரிவு - வைத்திய சேவை

II ஆம் பிரிவு - இரசாயனக்கூட சேவை

7.1.3 *கணக்கியல்* (நேரம் : 02 மணித்தியாலம்).- 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். - மொத்தப்புள்ளிகள் 100.

***பாடவிதானம் :***

(i) நிதிப்பிரமாணம் - I ஆம் பிரிவு
I ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்
II ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்
III ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்
IV ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்
V ஆம் அத்தியாயம் - 1, 2, 3, 4, 6 ஆம் பிரிவுகள்
VI ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்
VII ஆம் அத்தியாயம் - 1, 2, 3, 4, 6 ஆம் பிரிவுகள்

(ii) சுகாதாரத் திணைக்களத்தில் களஞ்சியக் கணக்கு வைத்தல் தொடர்பான ஒழுங்கு விதிகள்.

(iii) சுகாதாரத் திணைக்களத்தில் வழிகாட்டிக் கைநூலில் நிதி தொடர்பான பந்தி.

(iv) சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவரின் நாளாந்த கடமைகளுக்கு ஏற்புடைய நிதிப் பிரமாணம்.

7.2 **சிங்களம்/தமிழ் வாய்மொழிப் பரீட்சை.**-சிங்களம்/தமிழ் ஆற்றலை அளப்பதன் பொருட்டு திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களினால் கொழும்பில் நடாத்தப்படும் வாய்மொழி பரீட்சையாகும். மொத்தப் புள்ளிகள் 100. தனது நாளாந்த கடமைகளில் ஈடுபடும் பொழுது மேலோங்கும் நிகழ்வுகளின் பொருட்டு சிங்களத்தில் அல்லது தமிழ் மொழியில் கலந்துரையாடுவதற்கு உத்தியோகத்தருக்கு உள்ள ஆற்றலைப் பரீட்சித்தல்.

8. தயவு செய்து இச்சுற்று நிரூபத்தை உங்கள் பிரிவில்/விசேட இயக்கத்தில்/நிறுவனத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும். இத்தகவல்கள் www.health.gov.lk உள்ளடக்கப்பட் டுள்ளது.

(வைத்தியர்) யூ. ஏ. அஜித் மெண்டிஸ்,
சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம்,
சுகாதார செயலாளருக்காக.

சுகாதார போஷணை நலன்நோன்பு அமைச்சு,
"சுவசிரிபாய",
385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2007.07.27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| அலுவலகப் பிரயோகத்தின் பொருட்டு |
|---|

**ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை - 2007, செத்தெம்பர்**

Departmental Examination for Preliminary Grade Medical Officers & Dental Surgeons – 2007, September

1. (அ) (i) விண்ணப்பதாரரின் பெயர் (சிங்களத்தில் அல்லது தமிழில் முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்) :-----.

(ii) விண்ணப்பதாரரின் பெயர் (ஆங்கில கபிட்டல் எழுத்தில் முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்) :-

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (சிங்களத்தில் அல்லது தமிழில்) :-----.

(iv) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கில கபிட்டல் எழுத்தில்) :-

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) அலுவலகப் பெயர் (வைத்திய உத்தியோகத்தர்/பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்) :-----.
(ii) தகுதிகூர் நிலைக்கால நியமனம் பெற்ற திகதி :-----.
(iii) ஆரம்ப தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.

2. நீங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் பாடங்களுக்கு முன்னால் உள்ள கூண்டினுள் (✓) அடையாளத்தை இடவும். தோற்றாவிடின் (X) குறியை இடவும்.

| | |
|---|---|
| தாபன விதிக்கோவை | |
| கணக்கியல் | |
| சிங்களம் வாய்மொழி | |
| வைத்தியசாலைகள் மருந்துச்சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம் | |
| தமிழ்வாய்மொழி | |

3. (அ) தற்பொழுது சேவையாற்றும் இடம் :-----.

(ஆ) அதற்குரிய மாவட்டம் :-----.

(இ) பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாவட்டம் :-----.

(ஈ) அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு பிழையற்ற தெளிவாக முகவரி எழுதப்பட்ட 9" x 4" அளவுள்ள ரூபா 30.00 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்ட கடித உறையொன்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

(உ) (i) அஞ்சல் முகவரி (சிங்களத்தில் அல்லது தமிழில்) :-----.

(ii) அஞ்சல் முகவரி (ஆங்கில கபிட்டல் எழுத்தில்) :-----.

4. பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) :-----.

5. (அ) இதற்கு முன் இப்பரீட்சைக்குத் தோற்றி உள்ளீர்களா? :-----.
(ஆ) முதன்முறையாக அல்லாவிடின் முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளனவா ? அவ்வாறு தோற்றி இருப்பின் இம்முறையின் பொருட்டு முத்திரைகள் ஒட்டியுள்ளதா ? :-----.

| முத்திரைக் கூண்டு |
|---|

6. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில்,-

(i) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவைகளெனவும், நான் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன்முறையாக என்றபடியினால் கட்டணம் செலுத்தத் தேவையில்லை எனவும் /முதன்முறை அல்லாதபடியால் ரூபா......................... பெறுமதியான முத்திரைகள் ஒட்டியுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்திற்கு என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் செல்லுபடி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்பு பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதார சேவைத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைந்து நடப்பதற்கும், இப்பரீட்சை தொடர்பான நியதிச் சட்டத்தின்படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித்

தன்மையை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எவ்விதத் தீர்மானத்திற்கும் நான் அமைவேன் எனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : -----.

**நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர்/ திருமதி/ செல்வி ....................................................... ....................................................... என்பவரை நான் நன்றாக அறிவதுடன், இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன்முறையாகையால்*/ முதன்முறை அல்லாததாகையால் முத்திரை ஒட்ட வேண்டியதில்லை எனவும்*/ ரூபா ........... பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப் பத்தில் ஒட்டியுள்ளதாகவும், எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் சான்றுபடுத்துகின்றேன்.

.........................,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி : -----.

**பன்முகப்படுத்தப்பட்ட பகுதி/விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர்/திருமதி /செல்வி .................................................. ...................................... என்பவர் வைத்திய உத்தியோகத்தர் ஒருவர்* /பல் சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவராக எனது பிரிவில்*/ இயக்கத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர் வழிக்கோவையிலுள்ள விபரங்களின் படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவனுக்கு*/அவளுக்குத் தகைமைகள் உண்டு எனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

..................................
பன்முகப்படுத்தப்பட்ட பகுதி*/விசேட
இயக்கத் தலைவரின் கையொப்பம்.
(முத்திரை இடப்படுதல் வேண்டும்).

திகதி :----.

(* தேவையற்றனவற்றைக் கீறிவிடவும்.)

8-409

---

## பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு

பதிவாளர் நாயகம் திணைக்களம்

### ஆவண உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்க்கும் போட்டிப் பரீட்சை

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் ஆவண உதவியாளர் பதவிக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்ளும் போட்டிப் பரீட்சைக்காக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன . பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2007, திசெம்பர் மாதம் கொழும்பில் மேற்படி பரீட்சை நடாத்தப்படும். இப்பரீட்சையை பிற்போடுவதற்கும் இரத்துச் செய்வதற்கும் திணைக்களத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

1. **சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவையில் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இங்கு கீழ்க்குறிப்பிடும் நிபந்தனைகளுக்கும் அமைவாக ஆவண உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்க்கப்படும் :-

(i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரியது. தெரிவு செய்து நியமிக்கப்படும் விண்ணப்பதாரிகள் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு சந்தாப்பணம் செலுத்த வேண்டும். தாபன விதிக்கோவை, நிதிப் பிரமாணம் ஆகியவற்றிற்கும் கட்டுப்பட வேண்டும் ;

(ii) இது தொடர்பில் தாபனக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 இல் இருந்து 12 வரையான பிரிவுகளும் பொருத்தமா னவையாகும் ;

(iii) அரச சேவைக்குப் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்படுவோர் மூன்று வருட (03) தகுதிகாண் காலத்துக்கு உட்படுவர் ;

(iv) அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் ஒரு வருடத்திற்கு பதிற் கடமை அடிப்படையில் நியமிக்கப்படுவர் ;

(v) நியமனத் திகதியிலிருந்து 3 வருடங்கள் முடிவதற்குள் பதிவாளர் நாயகத்தால் நடாத்தப்படும் வினைத்திறமைகாண் தடை எழுத்துப்பரீட்சையில் சித்திபெற வேண்டும். வயது அடிப்படையிலான வினைத்திறமைகாண் தடையில் விடுவிப்பு வழங்கப்படமாட்டாது ;

(vi) அரச சேவையில் உள்ள அலுவலர்கள் இந்த பதவியில் நிரந்தரமாக்கப்பட்டதும் முந்திய சேவையின் அங்கத்துவம் முடிவுறுவதோடு அச்சேவைக்கு மீளவும் திரும்புவதற்கு உரிமையற்றவர் ஆவார்.

2. **சம்பள அளவுத்திட்டம்**.- MN- 1-2006 - ரூபா 12,920 - 10 x 120 - 11 x 140 - 10 x 210 - 10 x 290 - ரூபா 20,660 (6/2006 சுற்றுநிரூபம்)

3. **வயதெல்லை**.- 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

அரச சேவையில் உள்ளவர்களுக்கு உயர்மட்ட வயதெல்லை கிடையாது.

4. **கல்வித் தகைமைகள்**.- 2007.09.20 ஆந் திகதியில் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும் :-

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் மொழி (சிங்களம்/ தமிழ்) அல்லது இலக்கியம் மற்றும் கணக்கு, கணிதம் ஆகிய பாடங்களில் ஒன்றும் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரு தடவையில் குறைந்தது 5 பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும். இதில் மொழி/இலக்கியம் உட்பட 3 பாடங்களில் திறமைச் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

தே. க. பொ. த. பத்திரப் பரீட்சையில்இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் முதன் மொழி மற்றும் கணிதம் உட்பட 6 பாடங்களில்

சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரு தடவையில் குறைந்தது 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இதில் முதன் மொழி உட்பட 3 பாடங்களில் A அல்லது B சித்தி இருத்தல் வேண்டும்.

அல்லது

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் மொழி (சிங்களம்/ தமிழ்) மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரு தடவையில் குறைந்தது 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இதில் மொழி உட்பட 3 பாடங்களில் திறமைச் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5. **தொழில் மற்றும் வேறு தகைமைகள்.**- இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி அல்லது தேசிய இளைஞர் சேவை சபை அல்லது தேசிய பயிலுனர் சபை அல்லது சுருக்கெழுத்து அல்லது தட்டெழுத்து எழுதுனர் அல்லது உயர் கணக்கியல் அல்லது கணனி அல்லது நிதி உதவியாளர் 6 மாதத்துக்குக் குறையாத பயிற்சி நெறியைக் கொண்ட அரச நிறுவனமொன்றில் 6 மாத காலப் பயிற்சிநெறிக் காலத்தைத் திருப்திகரமாகப் பூரத்தி செய்து சம்பந்தப்பட்ட பயிற்சிச் சான்று பெற்றிருத்தல் வேண்டும்.

6. **ஆட்சேர்ப்பு முறை.**- அரச வர்த்தமானியில்/ செய்திப் பத்திரிகையில் அறிவித்தல் மூலம் விண்ணப்பம் கோரப்பட்டு தகுதியுள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் போட்டிப்பரீட்சையின் முடிவுகளின்படி ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்குட்படுத்தப்பட்டு தகுதியானவர் தெரிவுசெய்யப்படுவர்.

7. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் ரூபா 250 ஆகும். இப்பரீட்சைக் கட்டணத்தை விண்ணப்பம் கோரப்படும் முடிவுத் திகதிக்கு முன்பாக பரீட்சைகள் ஆணையாளர் திணைக்களத்தின் வருமானத் தலைப்பு 4000-20-03-20-13 இன் கீழ் பிரதேச செயலகத்தில்/ மாவட்ட செயலகத்தில் வைப்பிலிட்டு, பெறப்பட்ட பற்றுச்சீட்டு விண்ணப்பத்தின் உரிய இடத்தில் ஒட்டப்படல் வேண்டும். இக்கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்பிரதி ஒன்றை தம்மோடு வைத்துக்கொள்வது உகந்தது.

8. **விண்ணப்பிக்கும் முறை.**- (அ) விண்ணப்பம் இவ்விளம் பரத்துடன் சேர்க்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற் கமைய அமைதல் வேண்டும். அது தாளின் இருபக்கங்களிலும் அமைவதுடன் A4 அளவானதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தாளின் இருபக்கங்களும் பயன்படுத்தப்படல் வேண்டும். மாதிரிப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 5 வரையான விடயங்கள் முதற்பக்கத்திலும் ஏனையவை மறுபக்கத்திலுமாக அமைதல் வேண்டும். விண்ணப்பத்தின் நிழற்பிரதியொன்றை தம்மோடு வைத்துக்கொள்வது உகந்ததாகும்.

(ஆ) விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமைபெற்ற மொழியில் படிவம் பூர்த்திசெய்யப்படல் வேண்டும்.

(இ) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பப்படிவங்கள் 2007.09.20 ஆந் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத்தபால் மூலம் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்லை" என்னும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆவண உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை" என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

**குறிப்பு.**- அரசாங்க சேவையில்/மாகாண சேவையில் பணிபுரியும் விண்ணப்பதாரிகளின் மேற்படி விண்ணப்பம் அவர்களது திணைக்களத்தின்/நிறுவனத்தின் தலைவரினூடாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(ஈ) எல்லா வகையிலும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கு இடமுண்டு. தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் காணாது போனமை அல்லது தாமதமானவை சம்பந்தமான எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(உ) விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பப்படும். பரீட்சை நடைபெறும் திகதிக்கு ஏழு நாட்களுக்கு முன்பாக அனுமதிஅட்டை கிடைக்காவிடின் கீழ்க்குறிப்பிபிட்டிருக்கும் விபரங்களுடன் உடனடியாக பரீட்சைகள் ஆணையாளர் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும் :-

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் ;
(iii) முகவரி ;
(vi) விண்ணப்பம் அனுப்பிய திகதி, பதிவு இலக்கம், தபால் அலுவலகம் ;
(vii) பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டின் நிழற்பிரதி.

9. **பரீட்சை நிலையத்தினுள் அனுமதித்தல்.**- (i) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தியொருவர் பரீட்சை நிலையப் பொறுப் பாளருக்கு தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்பட மாட்டாது.

(ii) எல்லா பரீட்சார்த்திகளும் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்றவேண்டும். அத்துடன் பரீட்சார்த்திகளால் பின்பற்றப்படவேண்டிய பொதுவான சட்ட ஒழுங்குகளை பின்பற்றல் வேண்டும்.

(iii) பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட்டது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகுதி பெற்றுள்ளமையால், என்று ஏற்றுக்கொள்ளப்பட்டதால் என கருதப்படலாகாது.

10. **பரீட்சையில் ஆளடையாளம்.**- தாம் தோற்றும் எல்லா விடயங்கள் தொடர்பாகவும் பரீட்சை நிலைய பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அது தொடர்பில் குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றுமட்டும் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(1) ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;
(2) வழங்கப்பட்ட தினம், பரீட்சைத் திகதிக்கு 3 வருடத்திற்கு முற்பட்டதான கடவுச்சீட்டு ;

11. **பிழையான தகவல்களை வழங்குதல்.**- விண்ணப்பதாரி, உரிய தகைமைகள் அற்றவரென கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்த

சந்தர்ப்பத்திலாயினும் அவருடைய விண்ணப்ப தகைமை இரத்துச் செய்யப்பட இடமுண்டு. அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரி சமர்ப்பித்த ஏதாயினும் விடயம், அவர் பிழையானதென தெரிந்திருந்து சமர்ப்பித்தது தெரியவந்தால் அல்லது யாதாயினும் முக்கிய விடயத்தை வேண்டுமென்றே தெரிவிக்காதிருந்தால் அவர் அரசாங்க சேவையிலிருந்து நிறுத்தப்படுவதற்கு இடமுண்டு.

12. இப்பிரமாணங்களில் சொல்லப்படாத விடயங்கள் தொடர்பில் பொதுச்சேவை ஆணைக்குழுவினால் தீரமானிக்கப்படுகின்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.

13. **பரீட்சை முறை :-**

(1) *மொழிமூலம் :*

(அ) சிங்களம், தமிழ் மொழிகளுள் ஒன்றின் மூலம் விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) எல்லாப் பரீட்சார்த்திகளும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மொழியில் எல்லா வினாத்தாள்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(இ) தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மொழியை பின்பு மாற்றுவதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்படமாட்டாது.

(2) *பாடங்களும் அதுதொடர்பான விபரங்களும்.-* கீழ் குறிப்பிடப்பட்ட பாடங்கள் தொடர்பில் எழுத்துமூல வினாத்தாள் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் :-

(1) *மொழி ஆற்றல்.-* பரீட்சார்த்தியின் கருத்து வெளியிடல் ஆற்றல், எழுத்தாற்றல், இலக்கணம் தொடர்பான அறிவைப் பரிசீலிக்கும் நோக்குடனான கேள்விகளைக் கொண்ட 1 1/2 மணித்தியால வினாப்பத்திரம். (100 புள்ளிகள்)

(2) *நுண்ணறிவு.-* புள்ளிவிபர ஆற்றல், தர்க்கிக்கும் ஆற்றல் பொது அறிவு ஆகியவற்றை அளவிடும் வகையில் தயாரிக்கப்பட்ட கேள்விகளைக் கொண்ட 1 மணித்தியால வினாப்பத்திரம். (100 புள்ளிகள்)

ஆட்சேர்ப்புக்கான தகுதிபெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரம் தொடர்பிலும் 40 அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

14. இங்கு குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற எந்தவொரு விடயம் தொடர்பிலும் பதிவாளர் நாயகத்தின் தீர்ப்பே முடிவானது.

பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
கொழும்பு 11,
2007.07.27.

---

மாதிரி விண்ணப்பப் படிவம்

**பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு**

பதிவாளர் நாயகம் திணைக்களம்

*ஆவண உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்த்தல்*
(RECRUITMENT FOR THE POST OF DOCUMENT ASSISTANT)

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

| | |
|---|---|
| பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் | |

(சிங்களம் - 2, தமிழ் - 3)

(உரிய எழுத்தை கூட்டில் இடுக.)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணம் : SILVA, A. B.

(ii) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2. முகவரி :-

(i) தனிப்பட்ட முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(ii) அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(அரசாங்க சேவையில்/ மாகாண அரச சேவையில் உள்ள அலுவலர்களினால் அவர்களுடைய அலுவலக முகவரி எழுதப்பட வேண்டும். முகவரியில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் அதுபற்றி உடனடியாக அறிவிக்க வேண்டும்.)

3. (i) பிறந்த திகதி :-
ஆண்டு :----. மாதம் :----.திகதி :----.

(ii) 2007.09.20 ஆந் திகதியில் வயது :-

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

4. பால் (உரிய இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்)

ஆண் - 0
பெண் - 1

5. குடியியல் நிலை : (உரிய இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்)

திருமணமானவர் - 2
திருமணமாகாதவர் - 1

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

7. கல்வித் தகைமை : க. பொ. த. (சா. த.) பரீட்சை/தே. க. பொ. ப. பரீட்சை :-

1 ஆம் தரம் :-----.
வருடம் :-----.
சுட்டிலக்கம் :-----.

| பாடம் | சித்தி |
|---|---|
| 1.<br>2.<br>3.<br>4.<br>5.<br>6.<br>7.<br>8. | |

2 ஆம் தரம் :-----.
வருடம் :-----.
சுட்டிலக்கம் :-----.

| பாடம் | சித்தி |
|---|---|
| 1.<br>2.<br>3.<br>4.<br>5.<br>6.<br>7.<br>8. | |

தொழில் அல்லது வேறு தகைமைகள் :- வர்த்தமானி அறிவித்தலின் 7 ஆவது பந்தியின்படி பாடநெறி :-----.

| பாடநெறியைப் பயின்ற நிறுவனம் (தொழில்நுட்பக் கல்லூரி தேசிய இளைஞர் சேவை சபை, தேசிய தொழிற்பயிற்சி சபை) | பாடநெறி | பாடநெறிக் காலம் | பயிற்சி பெற்ற நிறுவனம் | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|---|
| | | | | |

| | |
|---|---|
| 8. | அகற்ற முடியாதவாறு பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு ஒட்டுக. |

9. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இங்கே தரப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானது என்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய ............................ இலக்கம் ............................ ஆந் திகதிய பற்றுச்சீட்டினை இத்துடன் இணைத்துள்ளேன் என்றும் வெளிப்படுத்துகிறேன். மேலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் பரீட்சையின் சட்டத்திட்டங்களுக்கு அமைவாக செயற்படுவதற்கும் இப்பரீட்சை தொடர்பான நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரென தெரியவரின் பரீட்சைக்கு முன்னரோ பின்னரோ விண்ணப்பத்தை இரத்துச் செய்வதற்கு எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்துக்கும் உள்ளாவதுடன் நியமனம் கிடைத்தபின்பு தெரியவரின் என்னை நட்டஈடு ஏதுமின்றி பதவியிலிருந்து அகற்றப்பட முடியுமென்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

----.
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தில் உத்தியோகத்தராகவும் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவராயுமுள்ள திரு./ திருமதி/ செல்வி ........................................................................ அவர்கள் 2007,................................மாதம்................ஆந் திகதி என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டாரென இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----.
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப்பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

(விண்ணப்பதாரி அரசாங்க சேவையில் உள்ளவராயின் திணைக்களத் தலைவர் அல்லது உரிய பதவி உத்தியோகத்தரினாலும், வெளிவாரி விண்ணப்பதாரியாயின் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடசாலை அதிபர் அல்லது ஓய்வுபெற்ற அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, அரச அல்லது மாகாண சேவை ஒன்றின் சம்பளத்திட்டத்தில் ஆரம்பச் சம்பளம் 19,755 அல்லது அதற்கு மேற்பட்ட திரட்டிய சம்பளம் பெறுபவர், பிரசித்த நொத்தாரிசு, தலைமை மதகுரு அல்லது வழிப்பாட்டுத்தலத்திற்கு பொறுப்பான மதகுரு ஒருவரினாலும் கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.)

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு./ திருமதி/ செல்வி ........................................................................ ............................ இத்திணைக்களத்தில் கடமையாற்றுகிறார் எனவும் அவரின் சேவை, வரவு மற்றும் நடத்தை திருப்திகரமானது எனவும் இந்த எழுத்துப்பரீட்சை தொடர்பான வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவானது எனவும், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு தேவையான தகைமைகளை உடையவர் எனவும், எச்சரிக்கை தவிர்ந்த எந்த வகையான தண்டனையும் பெற்றவரல்ல என்பதையும் அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

----.
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயரும் பதவியும் :----.
முகவரி :----.
தொலைபேசி இல. :----.
திகதி :----.

8-435

திருத்தம்

**அரசாங்க முகாமை உதவியாளர்கள் சேவையின் II ஆம் வகுப்பிலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை-2007 (1)**

இலக்கம் 1503 மற்றும் 2007.06.22 ஆந் திகதியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட பரீட்சை அறிவித்தல் தொடர்பாக,-

(02) மேலே குறிப்பிடப்பட்ட பரீட்சை அறிவித்தல் பந்தி 5.0 இல் குறிப்பிடப்பட்ட விண்ணப்ப முடிவுத் திகதி "2007, ஓகத்து 24 ஆந் திகதி" என திருத்தப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஏ. நோபட்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2007, யூலை 25.

8-438

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.